**பக்கம் எண்.1**

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பட்டுக்கோட்டை**

**அசல் வழக்கு எண்.** 78/2025

2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19ம் நாள் வெள்ளிக் கிழமை வாதிகள் தரப்பு சாட்சியாகிய PW1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியில் 9வது பிரிவின் படி) பெஞ்ச்கிளார்க் கிரேடு 3 செல்வி.S.கௌசல்யா என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| **பெயர் :** | அப்துல் குத்தூஸ் | **தொழில் :** | விவசாயம் |
|---|---|---|---|
| **தந்தை பெயர் :** | அப்துல் ரகுமான் | **சமயம் :** | – |
| **ஊர் :** | மதுக்கூர் | **வயது** | 65 |
| **தாலுக்கா :** | பட்டுக்கோட்டை | **சாதி:** | – |

**19.12.2025**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் வாதி ஆவேன், நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது வழக்கிற்கு ஆதாரமாக கடந்த 20.03.2024 ல் பட்டுக்கோட்டை ஸ்டேட் வங்கி கிளையின் ரூ.80000/–க்கான காசோலை(எண்.278514) அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியிடுகிறேன். 20.03.2024 ல் இந்தியன் வங்கி கிளையில் மேற்படி காசோலை செலுத்திய சலான் நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியிடுகிறேன்.21.03.2024 ல் பட்டுக்கோட்டை ஸ்டேட் வங்கி கிளையில் காசோலை திருப்பப்பட்டதற்கான மெமோ அசல் **வா.சா.ஆ.3**ஆக குறியிடுகிறேன். 10.04.2024 ல் எனது வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியிடுகிறேன்.15.04.2024 ல் திருப்பப்பட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பு அசல் **வா.சா.ஆ.5** ஆக குறியிடுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.